

# கௌரிதாசன் கவிதைகள்

அ.கௌரிதாசன்

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு
வடக்கு - கிழக்கு மாகாணம்
திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரிதாசன் கவிதைகள்

(கவிதைத்தொகுதி)

அ. கௌரிதாசன்

வெளியீடு

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு
திருக்கோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரிதாசன் கவிதைகள்

முதற்பதிப்பு : நவம்பர் 1996

பிரதிகள் : 500

அட்டைப்படம் : திரு. ம.வி.சிவதாசன்

விலை : ரூபா 40/=

உரிமை : கல்வி, பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை அமைச்சு
திருக்கோணமலை

அச்சுப்பதிப்பு : யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்
48B, புளூமெண்டால் வீதி,
கொழும்பு –13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## களம் அளித்தவைகள்:-

1. சுடர்
2. தினபதி
3. சிந்தாமணி
4. வீரகேசரி
5. தினகரன்
6. வாரமுரசொலி
7. தொண்டன்
8. புதிய உலகம்
9. வசந்தம்
10. தடாகம்
11. சூடாமணி
12. தினமுரசு
13. சங்கமம்
14. ஈழநாடு
15. குமரன்
16. கொந்தளிப்பு
17. மித்திரன்
18. கமத்தொழில் விளக்கம்
19. தாகம்
20. தூது
21. நிலாமகள்
22. கேணிச்சுடர்
23. ஈச்சம் பழம்
24. ஊர்க்குருவி
25. ஒளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

இன்றைய காலகட்டத்தில் ஒரு நூலை அச்சிட்டு வெளியிடுவதென்பது எழுத்தாளர்களைப் பொறுத்த மட்டில் மிகவும் சிரமமான காரியம் என்பது நாமறிந்தவொன்றே இதனைக் கருத்திற் கொண்டே எமது கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு வடக்கு-கிழக்கு மாகாண சபைக்குட்பட்ட எழுத்தாளர்களது நல்ல தரமான ஆக்கங்களை அச்சிட்டு வெளியிடும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது. கடந்த நிதியாண்டில் நாவல், சிறுகதை, கவிதை ஆகிய ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொரு நூல் அச்சிடப்பட்டுள்ளது.

இவ்வாண்டு இரண்டு கவிதை நூல்களையும் ஒரு சிறுகதைத் தொகுதியினையும் அச்சில் மதிப்பித்து வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றோம். திரு.அ.கௌரிதாசன் அவர்கள் கவிதை புனைவதில் மிகவும் ஆர்வமும் திறமையும் உள்ளவர். இவரது கவிதைகள் வீரகேசரி, தினகரன், மித்திரன், சுடர், போன்ற பத்திரிகைகளில் அடிக்கடி வெளிவந்துள்ளன. சில கவிதைப் போட்டிகளில் பரிசில்களும், பாராட்டும் பெற்றுள்ளார். இவரது கவிதைத் தொகுதி அச்சில் வெளிவருவது அவருக்கு பெரும் மனநிறைவினைக் தருமெனவே எண்ணகின்றேன். இதேபோன்று ஜனாப் வை.எம்.ஏ.ராஜ்கபூர் அவர்களது 'வானொலிப் பெட்டி' என்னும் சிறுகதைத் தொகுதியும் ஜனாப்.அ.மு.அப்துல் கஹ்ஹார் அவர்களது கவிதைத் தொகுதியும் இவ்வாண்டு வெளிவருகிறது. இனிவரும் காலங்களில் அமைச்சின் நூல் வெளியீட்டுத் திட்டத்தின் கீழ் மிக அரிதான நூல்களை அச்சிடுவதற்கே முன்னுரிமை வழங்கப்படும்.

**எஸ்.எதிர்மன்னசிங்கம்**
**பண்பாட்டலுவல்கள்**
**உதவிப் பணிப்பாளர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

எமது கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு கடந்த இரு வருடங்களாக நூல் வெளியீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது. அமைச்சின் முதலாவது வெளியீடாக 1995ம் ஆண்டு மட்டக்களப்பில் நடைபெற்ற சாகித்திய விழாவின்போது வெளியிட்டு வைக்கப்பட்ட 'பரிசுக்கதைகள்' என்னும் சிறுகதை தொகுப்பு நூலைக் குறிப்பிடலாம். அடுத்து 1996ம் ஆண்டு தமிழ் இலக்கிய விழாவில் வெளியிடுவதற்காக அச்சிடப்பட்டுள்ள மூன்று நூல்கள் இடம்பெறுகின்றன. ஒன்று "விழியோரத்துக் கனவுகள்" என்னும் சிறுகதைத் தொகுதி. இரண்டாவது 'இதயப்பூக்கள்" கவிதைத் தொகுதி மற்றயது "அவனுக்குத்தான் தெரியும்" நாவல் இலக்கியமாகும். இதன் தொடர்ச்சியாக "கௌரிதாசன் கவிதைகள்" என்னும் இத்தொகுதி அச்சிடப்படுகிறது. ஆசிரியர் அ.கௌரிதாசன் 1975ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை கவிதை எழுதிவருகின்றார். சிறப்பாக தினகரன், வீரகேசரி, தினபதி, சிந்தாமணி, சுடர் தொண்டன் ஆகிய பத்திரிகைகளில் கவிதைகள் பெருமளவு வந்துள்ளன.

இலங்கை வானொலி தமிழ் மஞ்சரி, இளைஞர் மன்றம், பாவளம் ஆகிய நிகழ்ச்சிகளில் இவரது கவிதைகள் ஒலிபரப்பப்பட்டுள்ளன. நூல் உருவில் வரும் முதற் கவிதைத் தொகுதி இதுவேயாகும். மேலும் பல நூல்களை ஆசிரியர் வெளியிட முயற்சி மேற்கொள்ள வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**சுந்தரம் டிவகலாலா**
***செயலாளர்.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மு(எ)ன்னுரை!

இலக்கண வரம்புகளை ஒழுங்காகக் கற்றுக் கொள்ளாத பாடசாலை வாழ்விலே கவிதையெழுத ஆரம்பித்த எனது முதற்கவிதை, "பற்றுக்கள்" என்ற தலைப்பில் "சுடர்" இதழில் வெளிவந்ததாக நினைவு. தேசிய நாளிதழ்களிலும் குறிப்பாக "சிந்தாமணி" எனது 'எதைப்பாடுவேன்?' என்ற கவிதையினைப் பிரசுரித்து கவிஞனென்று என்னை இலக்கிய உலகுக்கு இனம் காட்டியது. தொடர்ந்தும் சிந்தாமணி, தினபதி, தினகரன், வீரகேசரி போன்றவற்றிக்கும் அறிமுகமானேன்.

அன்று முதல் இன்று வரையும் (**1975-1996**) இலங்கையில் வெளிவரும் பல்வேறு சஞ்சிகைகளிலும் எனது கவிதைகள் ஆயிரத்துக்கும் அதிகமாக பிரசுரமானது. இலங்கை வானொலியிலும் எனது கவிதைகள் தெரிவாகி ஒலிமஞ்சரி, இளைஞர்மன்றம், பாவளம் நிகழ்ச்சிகளிலும் ஒலிபரப்பப்பட்டுள்ளன.

கடந்த **13.6.1990** வன்செயல் நிலைமையில் எனது இல்லம் சூறையாடப்பட்ட நிலையில் எனது உயிரிலும் மேலாகவே நான் மதித்த கவிதைக் கருவூலங்களை நான் இழக்க நேரிட்டது. அவற்றில் ஒருசில கவிதைகளின் நறுக்குகளைப் பத்திரப்படுத்தி வைத்திருந்தவர்களில் எனது மதிப்பிற்குரிய குரு கவிஞர் தாமரைத்தீவான், நண்பர்களான கவிஞர் ஏ.எம்.எம்.அலி, கவிஞர் ஐதுருஸ். ஏ.ஹசன் என்பவர்களை நன்றியுடன் நினைக்கிறேன்.

இன்றைய சூழலில் ஒரு எழுத்தாளன் சுதந்திரமாக தனது பேனாவை நகர்த்த முடியாத போதும், அருகிப்போன அச்சக தர்மம், எழுத்து சுதந்திரம் என்பவைகளுக்குப் புத்துயிரூட்டும் முயல்வில் எழுதிக் கொண்டுதான் இருக்கிறேன். நூலுருவில் வெளிவரும் எனது கவிதைத் தொகுதி இதுவேயென்பேன். வெளியிட ஏற்பாடு செய்த வடக்கு கிழக்கு மாகாண கல்விகலாசார, விளையாட்டுத்துறை சார்ந்த பணிப்பாளர்கள் திரு.எஸ்.எதிர்மன்னசிங்கம் திரு.எஸ்.அருளானந்தம் ஆகியோர் எனது சிறப்பான நன்றிக்குரியோர்.

இஃது அ.கௌரிதாசன்,
வள்ளுவன் வீதி , ஆலங்கேணி கிழக்கு.
28.4.1996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னாசை இது!

காரோடும் சீரோடும் உலகம் மீதில்
கனகாலம் வாழ்கின்ற ஆசையில்லை!
போராடும் ஏழைகளின் அவலம் தீர்க்க
புவிமீது கவிபாடும் ஆசையுண்டு!

சொத்தோடு சுகம்தேடி மனைவிமக்கள்
சுற்றத்தோ டுலகிருக்க ஆசையில்லை!
இத்தரையில் உழைப்பாலே ஒடிந்துபோன
ஏழைகளை வாழவைக்க ஆசையுண்டு!

வட்டியினால் பணமீட்டி வாழ்வோர் தம்மின்
வரிசையிலே சேர்ந்திருக்க ஆசையில்லை!
பட்டினியால் நித்தமுமே பரிதவிக்கும்
பாமரரின் நிலைமாற்ற! ஆசையுண்டு!

அரசியலில் உயர்பதவி தனையே பெற்று
ஆசனத்தை அலங்கரிக்கும் ஆசையில்லை!
இரவுபகல் உழைத்துடலம் ஓடாய்ப்போன
இனியவர்க்காய் பணிசெய்யும் ஆசையுண்டு!

தன்னுடலைத் தினம்விற்றே காசைத் தேடும்
தாசியரைத் தான்சேர ஆசையில்லை!
மன்பதையில் அன்புடனே ஒழுக்கம் மிக்க
மனைவியுடன் வாழ்ந்திடவே ஆசையுண்டு!

சாதனைகள் பலதோற்றிக் 'கின்னஸ்' நூலில்
சரித்திரத்தைப் படைக்கின்ற ஆசையில்லை!
பூதலத்தில் உழைப்பவரின் அணியில் நின்று,
பூரிப்பதைத் தரிசிக்க ஆசையுண்டு!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞன் யான் சாக மாட்டேன்

1 நீதிக்குத் தலை வணங்கி நிற்பேன்- என்றும்
நியாயத்தைக் குழி தோண்டிப் புதைக்க மாட்டேன்
சாதிப்பேய் தலைவிரித்து ஆடும் பொல்லச்
சதிராட்டம் தொடர வழி வகுக்கமாட்டேன்
ஆதிக்க வெறியர்களின் கரத்திலுள்ள
ஆயுதங்கள் கண்டும் யான் அஞ்ச மாட்டேன்
சோதியினை உலகிற்கு உண்டு பண்ணும்
சுதந்திரத்துக் கவிஞன் யான் சாக மாட்டேன்

2. வந்தனைகள் செய்தே தான் கோழை போல
வால்பிடித்துக் கால்பிடித்து வாழமாட்டேன்
எந்தவொரு பொழுதேனும் இலஞ்சம் பெற்று
எழிலாக என் வாழ்வை ஒட்ட மாட்டேன்
மந்தைகளாய் மதிகெட்டு வாழ்வோர் வாழ்வில்
மறுமலர்ச்சி தோற்றுவிக்க மறக்க மாட்டேன்
சந்ததியைத் தலைநிமிரச் செய்யும் கொள்கைச்
சத்தியத்துக் கவிஞன் யான் சாகமாட்டேன்

3. நெஞ்சறியப் பொய்யுரைத்தே நிலத்தில் வாழும்
நீசர்களின் கொட்டத்தைப் பாடமாட்டேன்
வஞ்சமனப் புலையர் தரும் துயரம் கண்டும்
வழி மாறி ஒருபோதும் ஓடமாட்டேன்
பஞ்சத்தால் பசித்திருந்து மடிந்தாலேனும்
பாரினிலே பிறர் பொருளைத் திருடமாட்டேன்
கஞ்சல்களைத் தான் ஓ(கூ)ட்டித் தூய்மை பேணும்
கௌரவத்தால் கவிஞன் யான் சாக மாட்டேன்

**தினமுரசு வாரமலர் 1993**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதியைத் தீயிலே போடடா!

சாதியைத் தீயிலே போடடா! -தீ
சமத்துவப் பாடலைப் பாடடா!
நீதியின் பக்கமே நில்லடா! நிதம்
நேர்மையின் வழியிலே செல்லடா!

நல்லதைப் பற்றியே பேசடா!- பூவில்
நலிவினைச் செய்திடக் கூசடா!
வல்லவன் ஆகியே வாழடா!- நம்
வயதினர் வார்த்தைகள் கேளடா!

அன்பினை நாளுமே போற்றடா!- நீ
அடிமையாம் வாழ்வினை மாற்றடா!
இன்பினைத் தோற்றவே முயன்றிடு!- வாழ்வில்
இன்னல்கள் இழைக்கவே பயந்திடு!

அயலவன் தன்னைநீ மதித்திடு! -நாளும்
ஆண்டவன் தன்னையே துதித்திடு!
செயம் பெறு; வாழ்விலே சிரித்துவிடு! -நல்ல
செய்கைகள் செய்தபின் மரித்திடு!

ஈன்றதாய் தந்தையெம் சொத்தடா!- அவர்
எமைஉரு வாக்கிய வித்தடா!
மாண்புசேர் கல்வியோ முத்தடா!- இறுதி,
மட்டுமே புகழ்தரும் சத்தடா!

இலட்சியம் மேலெனக் கொள்ளடா! -களை
இருந்திடின் முளையிலே கிள்ளடா!
கொலை, வெறி பாதகம் தானடா!- தூய
கொள்கையின் பாதையை நாடடா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றுவரும் (மு) விடிவு ?

இருக்கின்ற குடிசையது ஓட்டை!- பாழ்
இரவினிலே நுளம்புடனே மூட்டை!
வரும் மழையால் சிறுகுடிசை, குட்டை!-இல்
வாழ்வினிலே பெற்றதெலாம் பெட்டை!

காதலுடன் கைப்பிடித்த வஞ்சி! - நாளும்
களிப்புடனே வழங்குவதோ கஞ்சி!
சாதனைதான் மக்கள் மொத்தம் ஆறு!- என்
சரித்திரத்தில் பெற்ற பெறு பேறு!

வறுமையது நிதமென்னை வாட்டும்!- வாழ்வில்
வளமில்லை! துயரத்தீ மூட்டும்!
இறந்தாலும் ஈயாத நெஞ்சர் !- சற்றும்
இரக்கமிலார்! ஆமவர்கள் (ந)கஞ்சர்!

கற்றவன்நான் கவிபுனையும் கவிஞன்!- வாழும்
கலையுலகு மதிக்குமொரு கலைஞன்!
பெற்றசுகம் உலகினிலே வறுமை!- துயர்
பெற்றாலும் ஒருவகையில் பெருமை!

மனைவியுடல் காணவில்லைத் தங்கம்!- என்
'மாதரசி' தானெனக்குத் தங்கம்!
நினைவலைகள் பழையகதை சொல்லும்!- அன்று
நிகழ்ந்தவைகள் என்மனதைக் கொல்லும்!

ஆண்டவனே எனக்கெப்போ விடிவு?-காணும்
அல்லலுக்கு என்றுவரும் முடிவு?
வேண்டுகிறேன் நல்வழியைக் காட்டு!- இன்றேல்
விரைவினிலே என்னுயிரை ஓட்டு!

தினமுரசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெருப்பணைக்கவா!

ஊனுருகிப் போகுதடி
உள்ளமெலாம் உறையுதடி
தேனேயுன் நினைவாலென்
தேகமெலாம் தேயுதடி
வானூரும் வண்ணநிலா
வாட்டுதடி தீயெனவே
மானே வந்தேனையணைந்து
வாடல்நிலை தீராயோ!

தெருவில் நடக்கையிலும்
தேர்போல அசைந்து வரும்
உருவில் எழிலுடைய
ஓய்யார மெல்லிடையர்
அருகில் நெருக்குகையில்
அளிக்கின்ற புன்னகையில்
பருவம் தடுமாறும்
பதைப்பு வரும் உன்நினைவில்!

தளுக்கு நடைமாதர்
தரிசாக உடலெழிலை
எழுச்சி மிகு விதமாக
எடுப்பாகக் காட்டிவர
இழுக்கும் மனக்குரங்கு
இச்சைகளைத் தூண்டிவிடும்
வழுக்கும் மனத்துக்கோர்
வடிகாலாய் வந்தணைப்பாய்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனையோ திருமுனிவர்
இந்திரனும் வேறுபல
சத்தியத்தின் ஆளரெலாம்
சறுக்கி விழுந்தகதை
புத்தகத்தில் நான் படித்தேன்
புத்திதடுமாறுதடி
சித்தம் குழம்பு முன்னர்
செவ்விதழால் முத்தமிடு!

காதல் பெருக் கெடுக்கும்
கனிவான மனமுடையோன்
மாதேயுன் நினைவுகளை
மனதில் முழுமையுடன்
சாதல் வரைக்குமென்று
சத்தியமாய் வைத்து விட்டேன்
காதல் நெருப்பணைக்க
கண்ணே நீ வாராயோ!

சிந்தாமணி 1987



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிதன் ஆகி விட்டேன்!

பாலியல் ஆழியில் பாவையர் கூடவே,
பாரினில் முழ்கியவன்!- அந்த
நீலிகள் லீலையில் நிம்மதி பெற்றிட
நித்தமும் ஓடியவன்!

காசு,பணம்,பொருள் கண்டபடி தினம்
கையிலெடுத் தெறிந்தேன்!- துயர்
மாசுவடுவெலாம் மண்ணிடை பெற்றிப்போ,
மனிதனாய் மாறிவிட்டேன்!

கூடிப் பிறந்தவர் கூழுக்கழுதிடக்
குடித்து மகிழ்ந்திருந்தேன்!- அவர்
வாடிவதங்கிய காட்சிகள் கண்டுமே,
வாழ்வில் சிரித்திருந்தேன்!

வீணர் புகழுரை (த)அந்த மயக்கினில்
வேடம்பல தரித்தேன்!- பிறர்
காணும் அழகினை கன்னியர் லீலையில்,
கண்டபடி சிதைத்தேன்!

என்னைக் குழியினில் வீழ்த்திட, வந்தவர்
என்னுயிர்த் தோழரென்றேன்!- அவர்
சொன்ன பணிகளைச் சொந்தமென் றெண்ணியே,
சோகம் வரவழைத்தேன்!

மூடர் வரிசையில் முதல்வனென் றானதால்
முதலை இழந்து கெட்டேன்!- பல
பாடங்கள் கற்றதால்; பட்டங்கள் பெற்றிடாப்
" பண்டிதன் ஆகி விட்டேன்!"

-தினமுரசு-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழவழி தேடுகிறேன்!

"ஏழரைச் சனி"யன் என்னைப் பிடித்து
ஏனோ ஆட்டுகிறான்?- அவன்
வாழவிடவும் மாட்டான் போலும்,
வருத்தம் காட்டுகிறான்!

உள்ளதை எல்லாம் விற்று முடித்தும்
ஒட்டம் குறையவில்லை!- எனக்கு
'கள்வன்' என்றோர் பட்டமும் தந்தான்
கவலை மறையவில்லை!

திட்டம் போட்டு வாழ்ந்தும் பார்த்தேன்
'திருப்தி' கிட்டவில்லை!- வரும்
நட்டம் கண்டே நாளும் துயரம்
ந(ய)லங்கள் எட்டவில்லை!

இல்லம் தொடங்கி கந்தோர் வரைக்கும்
இன்னல் குறையவில்லை!-எனை
வல்லோன் என்றே வாழ்த்த மறந்தோர்,
'வசை'கள் மறையவில்லை!

"பாதிப்புற்றோர்' பற்றிய பணமும்
பக்கம் சேரவில்லை!- எனைச்
சோதிக்கின்ற சனியின் கோரம்
சற்றும் மாறவில்லை!

உறவுகள் கூட ஒதுக்கும் நிலையை
உலகில் காணுகிறேன்!- நான்
சிறப்புடன் வாழும் ஒருவழி தனையே,
செகத்தில் தேடுகிறேன்!

-தினமுரசு-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன சொல்லும்?

1. காலையின் வருகை தன்னைக்
கதிரவன் கிரணம் சொல்லும்!
வாலையின் வயது தன்னை
வனப்புறு பருவம் சொல்லும்!
காளையின் வாலிபத்தை-
கருவெனும் மீசை சொல்லும்!
ஏழையின் பசியைப் பற்றி
எவரது வயிறு(ம்) சொல்லும்!

2. ஆம், மழை வரவைப் பற்றி
அணைந்திடும் விண்மீன் சொல்லும்!
ஆம்பலின் மலர்வைப் பற்றி
அம்மதி வரவு சொல்லும்!
காம்புகள் உறுதி பற்றி
காற்றதன் சீற்றம் சொல்லும்!
ஏழைகள் பசியைப் பற்றி,
எவரது இதயம் சொல்லும்?

3. கட்சிகள் பெயரைப் பற்றிக்
கவினுறு நிறங்கள் சொல்லும்!
பட்சிகள் வரவைப் பற்றி
பழஞ்செறி மரங்கள் சொல்லும்
திட்டமே இல்லார் வாழ்வைத்
தேசமே பழித்துச் சொல்லும்!
பட்டினி கிடக்கும் ஏழை-
பசியினை என்ன சொல்லும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல உருவில் கவிஞன்!

1. கடவுளைக் கூடத் தட்டிக் கேட்போன்
கவிஞன் ஒருவன்தான்! - அவன்
மடமை இருளை விரட்டி ஓட்டும்
மகிமை ஒளி போல்வான்!
படரும் மூடக் கொள்கை மாய்க்கும்
பண்பில் தீ ஆவான்!- நிதம்
தொடரும் புன்மை நிலையைத் துரத்தும்
துணிவின் குன்றாவான்!

2. ஆட்சிக் கதிரை அடக்கும் முறையை
அறையும் முரசாவான்!-ஒரு
மீட்சி காணத் துடிக்கும் எண்ணம்
மிளிரும் செயல்வீரன்!
நாட்டார் நலனில் அக்கறை கொண்ட
நல்ல பண்பாளன்!- அவன்
"தோட்டா" கண்டும் துவளா நெஞ்சன்
துளைக்கும் துப்பாக்கி!

3. வாழும் கொடுமை ஓடப் பொருதும்
வடிவில் போர்வீரன்!- அவன்
நாளும் புதுமை நடக்கப் பாடும்
நல்ல பாவேந்தன்!
கோளும் புறமும் கொள்ளா நிற்போன்
கொள்கைக் குரிசிலவன்!- இங்கு,
மூழும் போரை முடிக்க நினைக்கும்
முனைப்பில் ஒருதீரன்!

கலட்டுத் தரையாம் மனங்கள் குளிரக்
கனியும் கார்மேகம்!- நிதம்
உலகில் வறுமை துரத்தும் போதும்,
உலவும் மென்காற்று!
நலங்கள் செய்ய நாடும் அவனே
நாட்டிற் (கு) உரமாவான்!- இவன்
துலங்கும் வையம் சமைக்கும் கவிஞன்
தொடரும் வரலாறு!

-தினமுரசு வாரமலர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் தங்கும் வாழ்வு!

1. குளிரும் பனியும் கொட்டும் மழையும்,
குறிஞ்சி நிலம் எங்கும்! - தினம்
களியே இல்லா எமது வாழ்வில்
கவலை துயர் தங்கும்!

2. அட்டை, ஊரும் மலையில் நாளும்,
அலைதல் எம் வாழ்வு!- நாம்
மட்டும் இல்லையேல் மண்ணில் மிடிமை-
மாறா; நிலை தாழ்வு!

3. சுரண்டு வோர்கள் சுகமாய் வாழ்ந்து,
சுகிப்பார் மாடியிலே! -நிதம்
வரண்ட வாழ்வை ஏற்ற நாமும்
வருந்திக் கோடியிலே!

4. ஓடாய்ப் போனோம்! ஒடியல் ஆனோம்!
ஓயா உழைப்பாலே! - எமை
மாடாய் மதிக்கும் மாந்தர் வாழ்தல்
எங்கள் பிழைப்பாலே!

5. இரக்கும் நிலையை உழைக்கும் நாங்கள்
ஏற்பது துயரமடி! - நாம்
புரட்சி செய்யப் புறப்பட்டோமேல்,
புவியும் தவிடுபொடி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறடி நிலம்!

1. ஆறடி நிலந்தான் இறுதியில் சொந்தம்
அதுவரை வாழ்வெனும் பந்தம்-துயர்
பேரிடியாகி பிளந்திடும் நெஞ்சம்
பிறந்தவர் இறையிடம் தஞ்சம்

2. வட்டியில் மாற்றார் வளங்களை உறிஞ்சி
வளமுடன் மண்ணிடை வாழ்ந்தார்- சிலர்
பட்டினி கிடந்தும் பசியென அழுதும்
பசிக்குண விடநிதம் மறந்தார்

3. மனித நேயம் மனத்தே யில்லால்
மந்தை எனப்புவி வாழ்ந்தார் -அவர்
இனிதே வாழ பணந்தான் தேவை
என்றார் இறுதியில் தோற்றார்.

4. குடியும் சூதும் கூத்தூம் களிப்பும்
குறிக்கோள் எனச் சிலர் நின்றார்- அவர்
முடிவில் மாய உலகினைத் தேர்ந்தார்
முருகனே கந்தனே என்றார்

5. உடன்பிறந்தோரினை விலக்கியே வைத்தவர்க்(கு)
உண்டுதான் உலகிலே மரணம் -தன்
உடன் பிறந்தோர்களின் பாதமே விழுந்திட
ஒருமுறை வந்திடும் தருணம்

6. நானெனும் ஆணவம் நெஞ்சிலே நிலைபெற
நானிலம் மீதினில் வாழ்ந்தார் -கல்
தூணெனே உறுதியாய் உள்ளவர் ஆயினும்
தூசிதான் இறுதியில் மாண்டார்.

**சிந்தாமணி 1986**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதியாய் ஆக்கி வைத்தான்

1. பிறந்திட வைத்தான் மண்ணில்
பிரியமும் கொள்ள வைத்தான்
உறவுகள் சுற்றம் வைத்தான்
உண்மையும் பொய்யும் வைத்தான்
நெறிமுறை வாழ்வு வைத்தான்
நினைவிலே சபலம் வைத்தான்
வறியவர் செல்வர் என்றும்
வாழ்விலே பேதம் வைத்தான்

2. இன்பமும் துன்பமும் என்று
இரண்டினை இணைந்து வைத்தான்
அன்புடன் சினத்தை வைத்தான்
அருளொரு இருளை வைத்தான்
என்புடன் தசையை வைத்தான்
எதிலுமே புதுமை வைத்தான்
நன்மையும் தீமையுந்தான்
நடந்திட வழிசமைத்தான்

3. பகலிரா படைத்து வைத்தான்
பழத்துடன் காய்கள் வைத்தான்
நகலுடன் அசலை வைத்தான்
நண்பர்கள் பகைவர் வைத்தான்
சகதியில் வாழ்க்கை தேரும்
சாய்ந்திடத் துயரம் கூட்டி
அகதியாய் ஆக்கி வைத்தான்
அனைத்துமே அவனின் ஆடல்

சிந்தாமணி -1985


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவனை நினைக்கின்றேன்

1. அடிக்கடி எந்தன் உடலை நோயேன்
அணுகிக் கொள்கிறது -கவி
படிக்கும் என்னை கவலை என்னும்
பளுவே கொல்கிறது

2. மாய உலகை மறந்தே நித்தம்
மதுவில் மூழ்கிய நான்- இக்
காயம் மீது நோய்தான் கொள்ள
கண்ணீர் விடுகின்றேன்

3. காசுக்காகத் தம்முடல் நல்கும்
கணிகையர் சுகம் கண்டேன்- இன்று
'ஆசுப்பத்திரி' செல்வது வாழ்வாய்
அடியேன் வாழ்கின்றேன்

4. இரவும் பகலும் இதுதான் சுகமென் (று)
இருந்தே தோற்றிட்டேன்- என்
வரவும் செலவும் மறந்தே நாளும்
வாழ்வை ஏற்றிட்டேன்

5. இளமைக் காலம் இழைத்த தவறை
இப்போ உணர்கின்றேன் -உடல்
அழகை இழந்து அல்லல் தொடர
அவனை நினைக்கின்றேன்.

-சிந்தாமணி -1986 -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கட்டும் பொங்கல்

1. பொங்கட்டும் பொங்கலது புவியினிலே எந்நாளும்
பொங்குகின்ற நீசர் ஆட்சி,
மங்கட்டும் மிடிமையெலாம் மடியட்டும் பாரினிலே
மங்களமே நிலைத்திடட்டும்
பொங்கலது புது வழிகள் புகலட்டும். இன்னலெலாம்
போகட்டும் மகிழ்ச்சி வந்து,
தங்கட்டும் தலைதூக்கி தமிழரெலாம் வாழட்டும்
தாழ்வுயர்வு நீங்கி டட்டும்

2. சத்தியமே ஓங்கட்டும் சமர்ஓய்ந்து பாரினிலே
சந்தோசம் தேங்கி டட்டும்
உத்தமர்கள் வாழட்டும் உலுத்தரெலாம் மாளட்டும்
உண்மை யெழில் பொங்கிடட்டும்
புத்துடைகள் பவனிவர புலர் காலைக்கதிரவனும்
புதிய ஒளி தந்திடட்டும்
சித்தமது களிக்கட்டும் செகம்வாழும் தமிழர்களின்
சிரிப்பினொலி கேட்டிடட்டும்

3. அடிமையராய் வாழ்கின்ற அவலநிலை மாறட்டும்
அகதி நிலை மாறிடட்டும்
மிடிமையெலாம் நீங்கட்டும் மேன்மைநிலை ஓங்கட்டும்
மேதினியோர் மகிழ்ந்திடட்டும்
வடிவான சமுதாயம் வந்து புவி ஆளட்டும்
வளங்களெலாம் தங்கிடட்டும்
முடிவொன்று வந்ததென முகமலர்ந்(து) தமிழரெலாம்
முற்றத்தில் பொங்கிடட்டும்

வீரகேசரி -1986-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருத்தம் என்னை வருத்தும்

1. பிரியமாகப் பெற்றெடுத்தேன்
பிள்ளைக் கின்று வருத்தம் - அது
உரிமையான தந்தை யென்றன்
உள்ளம் தன்னை வருத்தும்

2. முறுவல் செய்யும் பிஞ்சு முகத்தை
மூடும் துன்பத் திரைகள்- எனை
வறுமை வாட்ட மறந்த போதும்
வாட்டும் இந்த நிலைகள்

3. செல்லமான பிள்ளை பேச்சு
வெல்லமாக இனிக்கும் நிதம்
தொல்லை போக்க தொடரும் பேச்சு
தொடர்வதில்லை அடக்கம்

4. துள்ளி ஓடி கொள்ளை அழுகை
தோற்றும் எந்தன் பிள்ளை -நோய்
பிள்ளை உடலைப் பிடித்தாலே
பெற்றேன் நானும் தொல்லை

5. குறும்பு செய்யும் மோகனன் போல்
கொண்ட கோலம் போச்சு- உடல்
துரும்பு போல இளைத்தாலே
துயரம் வாழ்கை ஆச்சு

6. அப்பா என்று கனிவு தோய
அழைக்கும் குரல்கள் இல்லை- அவன்
சொக்கா- விக்கா என்று நித்தம்
சொல்லும் மொழியும் இல்லை

7. தந்தை என்னில் பெற்றே டுத்த
தனையனுக்கும் அன்பு- நிலை
அந்தோ மோசம் ஆன தாலைன்
அகத்தினிலும் அம்பு

-சிந்தாமணி -1985



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழலை!

1. வண்டுக்கரிய விழிகளினால்,
வடிவாய்ப் பார்த்து நகைபூக்கும்! -மலர்ச்
செண்டாம் அழகின் பொலிவோடு,
சிந்தையை ஈர்க்கும் சிறுபிள்ளை!

2. ஆட்டும் அழகுக் கைகால்கள்
ஆரத்தழுவி அணைக்கையிலே- எழில்
காட்டும்! மழலைக் குரலென்று,
'கனிவாய்' இனிமைத் தமிழ் சிந்தும்!

3. இணைதான் இல்லா ஒருநிதியும்
எழிலாம் வதனம் தண்மதியம்!- அதன்
துணையாய் அன்னை இருந்திடவே
துலங்கும் வடிவே அருள் மழலை!

4. சிரிப்பால் கவலைதனைப் போக்கும்!
செய்கை யாவும் களி தேக்கும்!- உடற்
செழிப்பே தங்கப் பாளங்கள்!
செய்யும் பலவாய் ஜா (கோ) லங்கள்!

5. பாடம் சொல்லும் கிளி யாக
பகரும் இனியமொழி பாகு!- எனில்
ஓடம் குருதி அதுவாகும்!
உறவால் சுகங்கள் உருவாகும்

6. முத்தம் வழங்கும் முத்தாக!
முறுவல் அகலாச் சொத்தாகும்!- என்
சித்தம் தனையே சிறை கொண்ட
செல்வம் அதுவே எழில் "மழலை"!

**தினகரன் 1988**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறையீடு!

1. காட்டிக் கொடுக்கும் கயவர் உலகில்
காலம் கடத்துவது;- கூர்
ஈட்டி முனையில் நடப்பது போலாம்,
இதுதான் என்முடிவு!

2. காசுக் காகத் தன்னுடல் நல்கும்
கணிகை மேலாவாள்! அவள்
மாசு சுமத்தி மதிப்பைக் குறைக்க
மனதில் எண்ணாதாள்!

3. எழிலாய் வாழும் நிலையைப் பார்த்தால்
எரிந்து விழுகின்றார்! - பல
பழிகள் சுமத்தி பாதையில் விடவே,
பாடு படுகின்றார்!

4. உறவோர் என்று அருகில் இருந்து
உண்மை அறிகின்றார்! - பின்
சிறையின் கூடம் அனுப்பும் வ(ப) ழியைச்
செய்து முடிக்கின்றார்!

5. கதிரின் ஒளியும், மதியின் பொழிவும்
காசினி வாழவழி! - பெரும்
சதிசெய் மாந்தர் இழைக்கும் தீமை
சகமே மாளவழி!

6. இறைவா, இந்த வகையில் மாந்தரை,
ஏனோ படைக்கின்றாய்? -என்
முறையீடதனை ஏற்றுக் கொண்டு,
முடிவினை வேறாக்கு!

-வாழ்வு 1988-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ம (பு)னிதன்

1. மனிதாவுன் கொள்கையிலேன் மாற்றம்-? உன்னால்
மண்ணுக்கு வந்திடுமா ஏற்றம்?
கனிவின்றிக் காட்டுகிறாய் சீற்றம் !- நீ
கருணையுடன் வாழுலகம் போற்றும் !

2. போட்டியிடு ! பொறாமையினை ஓட்டு !- ஒரு
புத்துலகை நீ படைத்துக் காட்டு !
ஆட்டிவைக்கும் ஆசையினுக் கெல்லை !- அணை
அதுபோட்டால் அண்டாது தொல்லை !

3. வெண்மை நிறம் கொண்டதுவே பஞ்சு !- அதன்
விம்பந்தான் தாராள நெஞ்சு !
கண்ணியத்தை மறந்தவர்கள் நெஞ்சு !- ஒரு
கணப் பொழுதில் உயிர்போக்கும் நஞ்சு !

4. நேர்மைக்கு தலைசாய்க்க கற்றால்; நடுவு
நிலைநின்று தீர்ப்புரைக்கப் பெற்றால்,
பார்மீது நீதிபதி நீதான் ! -உன்
பாதையது தவறுமெனில் போர்தான் !

5. காசுக்கு கொள்கையினை மாற்றி; கண்
காணாத காட்சிகளைச் சாற்றி,
நீசனெனும் பெயர்பெற்ற மனிதா ! -உன்
நிலைமாற்று, இனிஉலகில் புனிதன்

-ஊர்க்குருவி 1987-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ அருள வேண்டும்!

பண்டை தொட்டு தோழமையே குன்றா வண்ணம்!
பாரிடையே வாழ்ந்திட்ட இனங்கள் இன்று,
துண்டுபட்டுப் போனதனால் வாழ்வில் இன்று
துளியேனும் களிப்பில்லை ! தொடரும் வாழ்வில்,
அண்டையுடன் உறவாடிக் குலவ ஆவல்!"
ஆண்டவனே மென்மேலும் அவலம் வேண்டாம்!
குண்டு பட்டு இறக்காமல் என்னைக் காத்துக்
குவலயத்தைச் சீர்செய்ய அருள வேண்டும்!

மண்ணுக்காய் அடிபட்டு மண்ணாய்ப் போகும்,
மனநிலையில் மாற்றங்கள் மலர வேண்டும்!
பொன்னுக்காய், மண்ணுக்காய், பெண்ணுக்காகப்
புவிமீது உயிர் நீத்தோர் சரிதம் கோடி!
கண்விற்றுச் சித்திரத்தைக்கொள்ளும் பொல்லாக்,
காட்சியங்கள் காசினியில் தொடர்தல் கேடு!
புண்பட்ட உள்ளங்கள் தனையே தேற்றும்-
புலவன்யான் புவி வாழ அருள வேண்டும்!

உண்மையினை நேர்மையினை வாழச் செய்தே,
உவகையுடன் நரன் புவியில் உலவவேண்டும்!
திண்ணியநற் கொள்கை, பற்றும் கவிஞன் என்றித்
தேசமெலாம் எனைக் கண்டு வாழ்த்த வேண்டும்!
கண்ணியத்தை மதிக்கின்ற மாந்தர் வாழும்
காசினியைத் தோற்று வித்தே சாகவேண்டும்!
வண்ணத் தேன் கவிதைகளால் புதுமை செய்யும்,
வரந்தந்தே நீயெனக்கு அருள வேண்டும்!

**-சிந்தாமணி 1990**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவன் மீட்டும் வீணைகள்!

இவ்வுலகம் பொருளில்லார்க் இல்லை!- அந்த
இறையுலகம் அருளில்லார்க் இல்லை!
ஒவ்வொன்றும் இறையருளின் ஆணை! -நாம்
உயர் ஈசன் மீட்டுகின்ற வீணை!

கைபட்டால் எழுந்து வரும் நாதம்!- அவன்
கைதீண்டா வேளையிலே மோனம்
மெய்வாயை கண்மூக்கை செவியை; இன்னும்
மிகஅழகாய் படைத்திட்டான் புவியை!

பிறப்புண்டு உண்டேதான் இறப்பு! - இது
புவிமீதில் அவன் செய்த வகுப்பு!
சிறப்புகள், சிந்தனைகள் செல்வம்!- அவன்
சேர்த்து வைத்த வெற்றிகளின் சின்னம்!

தொடர்ந்து வரும் சிலகாலை இன்பம்! - அவன்
தோற்றிடுவான் சிலவேளை துன்பம்!
கடவுளவன் கருணைக்கு ஒப்பு! -இந்தக்
காசினியில் ஏதுண்டு செப்பு?

ஆறேழு பிள்ளைகளும் தருவான்!- ஒன்றும்
அற்ற தனி மலடாக்கி விடுவான்!
பேறுகளும் வெற்றிகளும் தோற்றும் ! -அந்தப்
பெருமானின் ஆணைகளே தோற்றம்!

அவன் காலில் படுகின்ற பற்று - நீ
அனுதினமும் அழுவதுமேன் நொந்து!
எவனவனை வென்றிடுவான் ஐயா!- நான்
எழுதியதில் ஏதேனும் பொய்யா?

அள்ளி அள்ளி எல்லையின்றிக் கொடுப்பான்!- அவன்
அற்றவர் கைப் பொருளினையும் எடுப்பான்!
வல்லவனே ஆளுகின்ற தலைவன்! -இந்த
வையகமே வணங்குமுயர் இறைவன் !

**தொண்டன் 1988**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோல்விகள்!

அப்பனை மகனைப் பார்த்தேன்
அன்னையை மகளைப் பார்த்தேன்
ஒப்பனை உலகம் பார்த்தேன்
ஒற்றுமை பிரிவு பார்த்தேன்
குப்பைகள் வாழு மிந்தக்
குவலயம் உயர்வு காண்ப
தெப்படி? என்றே பாட்டில்
எழுதிட முனைந்து தோற்றேன் !

உத்தமன் ஊரில் யாரோ?
உலுத்தர்கள் கூட்டந்தானோ?
சித்திரம் வேண்டு மாமோ
சீர்விழி விற்ற போதில்
கத்தியால் உண்டோ நன்மை?
காசினி உள்ள மாந்தர்
புத்தியை தெளிய வைக்கப்
புவிமிசை முயன்று தோற்றேன் !

சத்தியம் தர்மம் நீதி
சகலமும் ஏட்டில் பாட்டில்
தத்துவம் பேச்சில் ! ஆனால்
தன்னலம் வாழ்வு தன்னில்
முத்திரை பொறித்த மூடர்
முன்னணி வகிக்கும் பாரில்
நித்திரை கொண்டோர் தம்மை
நித்தமும் எழுப்பித் தோற்றேன் !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டதும் காதல் கொண்டு
கற்பினை இழந்து வாடும்
பெண்டிரின் பக்கம் போனேன்
பேயனாய் நாமம் பெற்றேன்
வெண்ணெய்தம் கையில் வைத்தே
வீதியில் நெய்யைத் தேடும்
தன்மையோர் மடமை போக்கத்
தரணியில் முயன்று தோற்றேன் !

கூன்விழுந்த திட்ட போதும்
கூலியாய் நின் றுழைத்து
நன்மைகள் எதுவும் காணா
நிலையினில் வாடுவோர்கள்
துன்பங்கள் போக்கு தற்காய்த்
தூணென உறுதி கொண்டு
நின்றுமே உழைத்து ஈற்றில்
கண்டதோ தோல்வி! தோல்வி !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்சிப்பாயா?

கன்னலாய் மொழிகள் சிந்தும்
கன்னியர் உறவை நித்தம்
பன்னெடுங் காலமாகப்
பாவியான் துய்த்து வந்தேன்!
இன்னலே சூழ்ந்த தன்றி,
இன்பமோ தொடர வில்லை!
இன்று யான் உணர்ந்து விட்டேன்
இறைவனே இரட்சிப்பாயா?

புகழுரை மயக்கில் எந்தன்
பொருள் பண மிழந்த தன்றிச்
செகத்தினில் வேறு காணேன்
சிறுமதி கொண்ட பேர்கள்
வகுத்திடும் தலைமை யேற்றேன்!
வாழ்விலே பலபேர் தம்மின்
பகைமையைத் தேடிக் கொண்ட
பாவியை இரட்சிப்பாயா?

மதுதரும் போதை யாலென்,
மதியினை இழந்து நின்றேன்!
புதுப்புது உறவா லெந்தன்
புகழெலாம் இழந்து விட்டேன்
வதுவையே இரண்டு கண்டேன்
வாழ்க்கையே அதுதானென்றேன்!
அதுவெலாம் மறந்தே னின்று
ஆண்டவா இரட்சிப்பாயா?

கட்டிய மனைவிக் காற்றும்
கடமைகள் மறக்கலானேன்!
வட்டியால் பலபேர் தேட்டம்
வாழ்வெலாம் பறிக்க லானேன்!
மட்டிலா மகிழ்ச்சியோடு
மண்ணிடை வாழ்ந்த காலம்
இட்டமாய் உந்த னெண்ணம்,
இல்லைநீ, இரட்சிப்பாயா?

**சிந்தாமணி -1986**
**புதிய உலகம் -1987**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவானசமுதாயம் உருவாக வேண்டும் !

1. நெருப்புப் புயலொன்று நிலத்தில் உருக்கொண்டு
நீசர் தலை கொய்ய வேண்டும்!- இடர்
வருத்தும் பகைக் கொடுமை வையகத்தே இருந்தோட
வழிவகைகள் தான்செய்ய வேண்டும்!
அருத்தமிலாத ஆட்சிமுறைக் கோப்புக்கள்
அனைத்தும் தொலைந்தாக வேண்டும்! -எழில்
பொருத்தும் நிலைகூட, பூரிப்பால் மாந்தரெலாம்
புதுவாழ்வு பெற்றாக வேண்டும்!

2. ஏட்டிக்குப் போட்டியென இல்லாத விதம்கூட,
எல்லோரும் வாழ்வேற்க வேண்டும்!- எமைக்
காட்டிக் கொடுக்கின்ற 'கருங்காலி' உள்ளங்கள்
கறை நீங்கித் தானுய்ய வேண்டும்!
வேட்டுக்கள் கேளாமல் விடிகின்ற பொழுதொன்று
விரைவினில் நாம்காண வேண்டும்! -தலை
ஆட்டிப் (பி) முடிக்கின்ற அறம்சொல்லும் செயலிந்த
அகிலத்தை விட்டோட வேண்டும்!

3. கற்றோர்கள் என்கின்ற கலைசான்ற மேலோர்தம்
கருத்துக்கள் புவிகாண வேண்டும்!- பணப்,
பற்றற்றோர் சேவையினால் பளுதீர்ந்து எந்நாளும்,
பசுமைகளே தான்சேர வேண்டும்!
மற்றோரை அன்போடு மதிக்கின்ற பண்போடு,
மனத்தூய்மை பெற்றாக வேண்டும்!- நேர்மை
அற்றோரை மிதிக்கின்ற அறிவான சமுதாயம்
அரைநாளில் உருவாக வேண்டும்!

-சிந்தாமணி-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேதினியில் மேதினம்

1. மலைசரிந்து சமதரையாய் ஆக்கி ஆங்கோர்,
மாளிகையை உருவாக்கும் மண்ணின் மைந்தர்-
வலைவிரிக்கும் முதலாளிக் கூட்டத் தாரால்
வளம்குன்றி; வாழ்க்கையிலே வசந்தம் குன்றி,
தலைவிதியா என்றேங்கி வாடும் பொல்லாத்
தாழ்வுநிலை தான்நீங்கி மேன்மை காண
உலகத்தில் தொழிலாளர் தினமென் றோதும்,
உயர்வான மேதினமே வருகநீயும்!

2. சுட்டுவிரல் அசைவினையே கண்டு அஞ்சும்,
சுதந்திரங்கள் பறிபோன உழைக்கும் வர்க்கம்
கொட்டுகின்ற வெய்யிலிலே குளித்த போதும்,
குடிசையிலே வாடு (மு) கின்ற கோரக்காட்சி
மட்டுமிந்த மண்விட்டு ஓடும் வண்ணம்
மகிமை நிலை தான்தோற்றி மகிழ்ச்சிகாண,
இட்டமுடன் மேதினமே வருவாய்! வந்து
இன்பங்கள் தானூட்டு! துயர்கள் ஓட்டு!

3. மேடையிலே தானேறி உழைப்போர் வாழ்வை
மேன்மையுறச் செய்வதென மேலும் மேலும்
கோடையிடி தான்தோற்கும் குரலிற் பேசும்
குள்ளநரித் தலைவர்களின் கொள்கை சாய்த்து,
பாடையிலே அன்னவர்கள் படுத்து றங்கிப்
பவனிவரும் காலத்தைப் படைத்துக் காட்ட
பீடையெலாம் தொலைத்தோட்டி உழைப்போர் வாழ்வில்,
பிறங்குமொளி தந்திட "மே தின மே வாராய்! "

**சிந்தாமணி- 1987**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலையுலகு எனைப் போற்றும்

மாத்திரையோ டென்வாழ்வு ஓட்டம்! - துயர்
மனநிலையால் எப்பொழுதும் வாட்டம்!
சாத்திரிகள் சொல்; பேயின் குறையாம்! - அதை
சாந்திசெய்தால் பெறுபேறு நிறைவாம்!

மருத்துவர்கள் என்நோயைக் காணார்! - சுற்றம்
மகிழ்வூட்டி எனதுறவைப் பேணார்!
பருத்தவுடல் ஆம், முன்னர் இரும்பு! - பழைய
பலம்குன்றி அதுஇப்போ, துரும்பு!

சிகைகூட அழகில்லை வெண்மை! - வாழ்வில்
செயமில்லை! இருந்தென்ன நன்மை!
வகைவகையாய் சேர்த்தவைகள் இல்லை! - நானும்,
வாழ்வினிலே ஏற்பவைகள் தொல்லை!

கட்டியவள் அயலிலில்லைத் தூரம்! -இஃது
காசினியைத் துறக்கின்ற நேரம்!
பெற்றசுகம் கடைசியிலே வருமா?- பணம்
பெற்றுமென்ன, அதுநிறைவைத் தருமா?

ஈன்றெடுத்த மழலைகளும் மாற்றம் ! -எனில்,
இறுதியிலே எனக்கில்லை ஏற்றம்!
காண்கின்ற இருட்டுலகு தூற்றும்! - மேன்மைக்
கலையுலகு என்றுமெனைப் போற்றும்!

**தினமுரசு 1995**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருக தைப் பொங்கல்!

இன்னல் பட்டே வாழ்கின்ற
இகத்தின் மாந்தர் இன்பமுற
என்றும் வாழும் பகைமாறி
எழிலாம் அன்பு நிலைகொள்ள
ஒன்றாய் மாந்தர் எல்லோரும்
ஓரணி நின்றே வாழ்வேற்க
கன்னற் சுவைபோல் இனிமைதர
காசினி வருக தைப்பொங்கல்

திகதி மாதம் வருடங்கள்
தீர்ந்தும் துயரம் தீராமல்
அகதிக ளென்ற பெயரோடிவ்
அகிலம் வாழும் மாந்தர்களின்
முகங்கள் தனிலே நகைபூக்க
மூட்டும் பணிகள் சிறப்பாக
செகத்தில் வந்து வாழ்வெல்லாம்
செயல்கள் தருக தைப் பொங்கல்!

குத்தும் வெட்டும் கொலைகளவும்
கொள்ளா வையம் உருவாக
இத்தரை வாழும் மனிதர்களின்
இதயந் தூய்மை தனைக்காண
புத்துடைக் கோலம் தான்காட்டி
புத்தொளி தந்தே வனப்பூட்ட
சித்தம் மகிழ்ந்தே இன்றமிழர்
சிரிக்க வருக தைப்பொங்கல்!

வீரகேசரி - 1985



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னல் வாழ்வு

"கூட்டுறவு நாட்டுயர்வுக்" காக! - என்று
கூறுகின்ற வார்த்தையெதுக்கா?
கூட்டுறவுச் சங்கப் பொறுப்பாளர் -கள்வர்
குகைகளுக்குப் பதுக்கல் செய்கிறார்கள்!
தீப்பெட்டி, மஞ்சள், மல்லி இல்லை! - பெருஞ்
சீரகத்தால் மிளகாயாற் றொல்லை!,
கூக்குரல்தானிட்டாலும் நீதி! - கூற
இல்லையடா? சீர்திருத்தவாதி!

"இலஞ்சத்" தால் பெருந்தொல்லை நாட்டில் -அதை
இலக்கியமாய் வடித்திடலாம் ஏட்டில்!
பலவழியில் வைக்கின்றார் வலைகள்! - ஏழை
பாமரர்க்குத் தானிந்த நிலைகள்!
பணக்காரன் வாழுமிடம் மாடி ! - நல்ல
பாட்டாளி வதியுமிடம் கோடி!
பணத்தாலே வந்ததேற்றத் தாழ்வு! என்றும்
பாடுபடும் வர்க்கம் இன்னல் வாழ்வு!

தேங்காயின் விலை விண்ணை நோக்கி- அது
ஏறுதடா ! இனியென்ன பாக்கி!
ஏங்குகிறார் நிதம் நிதமும் வாடி! -துயர்
ஏற்பட்ட இதயங்கள் கோடி!
பாங்காகத் தேவையடா சட்டம்! - அது
பயன்தரவே, வகுத்திடலாம் திட்டம்!
தூங்காமற் துடித்தெழுவாய் தம்பி! - இந்தத்
தேசமுந் தன்கைகளினை நம்பி!

சிந்தாமணி 1986

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படப்பிடிப்பு

தலைவலிக்கோ மருந்துண்டு! ஆனால் எந்தன்
தலைவலிக்கு மருந்தென்ன? அழகாய்ச் செய்யும்,
கலைத் தொழிலை விட்டிடவா? காசில் லாமல்,
கடிய பணி ஆற்றிடவா? நாடு தாண்டித்,
தொலை தூரம் போய்விடவா? எந்தன் அன்புத்
துணையாள் சொற் கேட்டிடவா? இரக்கத்தாலே,
அலை மோதும் நெஞ்சத்தைக் கருங்கல் லாக்கி,
ஆணைபல போட்டிடவா? அறியேன் ஏதும்!

அஞ்சலகத் துள்ளவன்நான்! அந்திநேரம்
அழகு புகைப்படம் பிடிக்க ஆவல் கொண்டேன்!
கெஞ்சிடுவார்- போவேன்நான்- எடுப்பேன்! ஏதும்
கிடைக்காது ! திரிவேன் நான் " கமரா" வோடு!
வஞ்சமிலேன்! பலர்மீண்டும் வாவா என்றால்;
வரத்தானே செய்வேன்நான் வழிவே றென்ன?
மிஞ்சுவது தலையிடிதான் மேன்மை இல்லை!
மென்மேலும் துயரந்தான் சூழ்ந்து கொள்ளும்!

மன்றங்கள் பிறந்தநாள், மணநாள் வீடு!
மந்திரிகள் கூடுகின்ற அரங்கில் எல்லாம்,
அன்புடைய என்சேவை தொடரும்! ஆனால்,
அதற்கேற்ப வருமானம் கிடைப்பதில்லை!
இன்பத்தைக் காணாத படியால் எந்தன்
இல்வாழ்வும் தொடர்கிறது! ஏற்றமின்றி!
மன்பதையில் வாழுகிறேன்! மற்றோர் ஆய்வில்
மகிழ்ச்சி தரும் விதமிந்தப் 'படப்பிடிப்பு'

**தினகரன் 1988**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவி!

1. மண்ணகத்தில் மனைவியென வந்தாள்! -எனை
மகிழ்ச்சியிலே குளித்திடவே வைத்தாள்!
கண்ணெனவே எனைநன்கு காப்பாள்!- தினம்
கட்டுடலைத் தந்துமுகம் வேர்ப்பாள்!

2. அத்தானே என்றுநிதம் அணைப்பாள்!- தன்
அழகிதழால் என்னிதழை நனைப்பாள்!
சொத்தென்று நான் தழுவச் சிரிப்பாள்!- அந்த
சுகமெல்லாம் இராமுழுதும் அளிப்பாள்!

3. இறைபக்தி கொண்ட அவள் நல்லாள்!- தூய
இல்வாழ்வில் வளம் சேர்க்கும் இல்லாள்!
குறைகாணா இதயத்தைக் கொண்டாள் ! -தன்
குடியிருப்பு என்இதயம் என்பாள்!

4. சுற்றத்தை நன்றாக மதிப்பாள்! -என்
சொல்வேத வாக்காகத் துதிப்பாள்!
கற்றவர்முன் கண்ணியமாய் நடப்பாள்!- நாளும்
கைச்சிறையில் குழந்தையெனக் கிடப்பாள்!

5. அறுசுவைசேர் அடிசில்களைப் படைப்பாள்!- அவள்
அன்பான வார்த்தைகளை விதைப்பாள்!
பொறுமையெனும் ஆழியிலே குளிப்பாள்!-மழலை
பூமுத்தம் அளிக்கையிலே களிப்பாள்!

6. காதலித்துக் கைப்பிடித்த மங்கை!-காதற்
கணைவீசும் ரதிக்கு அவள் தங்கை!
மோதலில்லா வாழ்க்கைக்குத் துணைவி!- எழில்
"மோகனமென் உளம்கொண்ட மனைவி!"

தினமுரசு - 1994



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கச்சி

தங்கங்சி, தமிழ்பெண்நீ கொஞ்சம் கேளு
தரணியிலே தன்மானத் தோடே வாழு,
இங்குன்றன் நடைமுறைகள் தனையே கண்டு,
இதயத்தால் அழுகின்றேன் அண்ணன் யானே!

தாவணியும் சேலையுமே தமிழ்பெண் ஆடை,
தங்கச்சி இவற்றை யெல்லாம் தூக்கிவீசு!
ஆவலினை மற்றவர்க்குத் தூண்டும் வண்ணம்
அரைகுறையாய் ஆடையினை அணிகின்றாய் ஏன்?

வகிடெடுத்து தலையதனை வாரிக் கட்டு
வஞ்சிநீ, குதிரைவால் கொண்டை விட்டே
பகிரங்கமாய் உடலின் கவர்ச்சி காட்டிப்
பண்பாட்டைக் குழி தோண்டிப் புதைக்க வேண்டாம்!

மங்கையர்க்கு உரித்தான குணங்கள் நான்கும்,
மறந்தவளாய் பாரினிலே வாழும் தங்காய்!
இங்குனது பரம்பரையின் ஏற்றம் காட்ட
இதயத்தில் உறுதியினை ஏற்றுக்கொள்ளும்!

அயல்நாட்டு மோகத்தை அறவே தள்ளு
அருந்தமிழர் நடையுடைகள், பண்பை உள்ளு
செயம்காணச் சிந்தையிலே தூய்மை கொள்ளு,
சிந்தித்தே தங்கச்சி செயலால் வெல்லு!

தங்கம் போல் அழகுடைய தங்காய் எங்கள்
தமிழரது கலை தன்னை, வாழ்க்கை தன்னை
மங்கவைக்கும் மங்கையென மாறிப் போனால்
மற்றவர்கள் உனைக்கண்டு மதிக்க மாட்டார்!

நேரான பாதையிலே நிமிர்ந்து செல்லு
நேர்மையொடு வாய்மையினால் உலகை வெல்லு
ஏராளம் எங்களது சரித்திரங்கள்
ஏற்றுக்கொள், புதுமைகளைத் தோற்றி நில்லு!

**சிந்தாமணி 1987**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகம் (தெ) புரியாது!

மூசிக் கச்சான் காற்று அடித்தால்
முறியும் என்தேகம்! -இனிப்
பேசி என்ன பலன்தான் உண்டு
அனைத்தும் பெண்போகம்!

காசுக்காகத் தம்முடல் நல்கும்
கணிகையர் சுகம் கண்டேன் !- தினம்
"ஆசுப்பத்திரி" செல்வது வாழ்வாய்
அடியேன் வாழ்கின்றேன்!

போதை சேர்க்கும் பானம் யாவும்
பருகிப் பார்த்துள்ளேன் !- உடல்
வாதை கண்டே சோரும் வகையில்
வாந்தி எடுத்துள்ளேன்!

கஞ்சா, பீடி, சுருட்டு அனைத்தும்
கண்டு களித்திட்டேன்!- தலை
பஞ்சு நிறமாய் மாறியபின்பே,
பிழையை உணர்கின்றேன்!

கட்டிய மனைவி தடுத்தும் தொடர்ந்து,
கலந்து மகிழ்ந்திட்டேன்!- பிள்ளை
எட்டோ டெட்டு பதினா றென்று
பெற்று முடித்திட்டேன்!

காலன் வரவுக் காக இப்போ
காத்துக் கிடக்கின்றேன்-வாய்
வேலா- கந்தா சொல்ல! பாயில்
விழுந்து கிடக்கின்றேன்!

நன்மை தீமை இளமைக் காலம்
நமக்குத் தெரியாது ! - அனுபவம்
உண்மைநிலையை உரைக்கும் வரையில்
உலகம் புரியாது!

தினமுரசு 1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பட் ஜெட்" (டு) போடுகிறேன் !

பட்டணத்தில் நான் வேலை பார்த்தபோதும் !
பலநூறைவேதனமாய் பெற்ற போதும்,
'பட்ஜெட்' டே போடுகின்றேன் மாதா மாதம்,
பணத்தேவை முற்றாகத் தீர்ந்த தில்லை !
கட்டிய என் மனைவிக்கு ஐந்து நூறு !
கருணை மிகு அன்னைக்கு இரண்டு நூறு !
பட்டணத்து வாழ்வுக்கு ஆறு நூறு !
பாக்கி சில ரூபாய்கள் கையில் மிஞ்சும் !

நீளக்காற் சட்டையது முன்னர் உள்ள,
நிறம் மங்கிக் கிழிந்திட்ட போதும் தைத்து,
வேலைக்குப் போடுவதென் வழக்கமாச்சு,
வேறென்ன செய்திடலாம் ! உத்தியோகம் !
வாழ்த்தான் அண்டிடுமா? வயல்கள் தோட்ட
வருமானம் இல்லாத வாரிசாச்சே !
காலத்தை ஓட்டுகிறேன் 'பீஎம்' என்றே
கௌரவந்தான் வேறெதையும் காணவில்லை !

காதலுடன் பழகுகின்ற 'ஏசி எல் எம்'
கடைக்குரிய நிர்வாகி 'ரவூப்' மட்டும்
வேதனையை உணருகின்றார். கையில் இல்லா;
வேளையிலும் உதவுகின்றான் ! மற்றோர் எல்லாம்,
போதனையில் வள்ளல்களே ! காக்கை கூடப்
புசிக்கின்ற வேளையிலே துரத்தமாட்டார் !
ஆதனங்கள் இல்லாத என்னைப் போன்ற,
ஆருக்கும் உதவி தர ஆட்கள் இல்லை !

கண்டவுடன் பற்காட்டிக் கதைகள் பேசும்
கயவர்களை இனம்கண்டேன், புவியின்மீது,
உண்டவர்க்கே உபசரித்து உணவு நல்கும்,
உளம் பெற்ற மனிதர்களே உலவக் கண்டேன்.
பண்பு மட்டும் இருந்திட்டால் பயனொன் றில்லை !
பணம் கையில் இலையென்றால் வாழ்வேதொல்லை !
உண்மையிதை உணர்கின்றேன் ! மாதம் தோறும்
உலகத்தில் நான் 'பட்ஜெட்' போடு கின்றேன் !

**சிந்தாமணி 1986**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவினுக்கு விலையென்ன?

1. கள்ளைப்போல் வெறியூட்டும் கள்ளி!
காரிகையின் தேகமது ஒல்லி!
காணுகின்ற காலையிலே,
கண்களினால் கதைபேசும்
கன்னிதனை அணைத்திடுவேன் அள்ளி!

2. கனிபோல எழிலான கன்னம்!
கால் பெயர்ந்து நடைபயிலும் அன்னம்!
காரிருளில் நித்தமுமே
கலவியெனும் சுகப்போதில்;
கட்டிலிலே அவள்கைகள் பின்னும்!

3. குறும்புதனைக் காட்டுமவள் பேச்சு!
கூடுகையில் அனலாகும் மூச்சு!
குரங்கைப்போற் சேட்டைபுரி
குமரர்களைக் காணுகையில்,
கூறாக்கும் வாள்; விழியின் வீச்சு!

4. வண்ணமலர் தனிலமரும் அளிகள்!
வனப்பினையே காட்டுமவள் விழிகள்!
வற்றாத சுகம்நல்கும்-
வஞ்சியவள் உடலெழிலை
வடித்திடவே, எங்குண்டு மொழிகள்?

5. கச்சதனை மீறும்இள முலைகள்!
காட்டுமது இமயமெனும் மலைகள்!
கருத்தினையே கவர்ந்திட்ட
கன்னிமயில் உடலேற்ற
கவினுக்கு யார்குறிப்பார் விலைகள்?

-சிந்தாமணி -1990



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலை வைக்காதீர்!

1. இத்தரையில் வாழும்நல் இதயத்தோரே
இறப்பெல்லா மாந்தருக்கும் நியதிதானே!
செத்தபின்னால் நல்லவனாய் வாழ்ந்தோ ரென்று,
செதுக்காதீர் என்பெயரை சந்ததி தன்னில்!
குத்துக்கற் றூண்கட்டிச் சிலையை வைத்தால்,
குந்துகின்ற காகங்கள் தலையின் மீது
நிச்சயமாய் எச்சத்தை இடுமே! என்னை-
நினைத்திருங்கள் ! சிலைசெய்து நிறுத்த வேண்டாம்!

2. என்னினைவாய் இருப்பதற்கு மடங்கள் கட்டி
எழிலாக வெள்ளைநிறம் பூசாதீர்கள்!
புன்மதியைக் கொண்டவர்கள் தவறாய் ஏதும்
பொல்லாத வாசகங்கள் கிறுக்கி வைப்பார்!
என்னினைவாய் அமைக்கின்ற கூடம் தன்னால்
எதிரிகளை எதிரிகளே சாட நேரும்!
அன்பாக வேண்டுகிறேன், அகிலத்துள்ளோர்-
அமைக்காதீர் என்நினைவுக் கட்டிடங்கள்!

3. முத்திரையில் என்னுருவைப் பொறிக்க வேண்டாம்!
முத்திரையில் அஞ்சலகத் தார்கள் தேதி
முத்திரையை இட்டிடுவார்! என்றன் மீதில்,
முழுப்பேரும் கையொப்பம் இடுவா ரன்றோ?
உத்தமனாய் உயர்ந்தவனாய் உலகம் தன்னில்
உயிருள்ள வரையிலுமே வாழ்ந்தோ ரென்று
சத்தியமாய் சொல்லிடுங்கள்! மேலே சொன்ன
சங்கதிகள் ஏதேனும் செய்யாதீர்கள்!

சிந்தாமணி 1988



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எது செய்தேன்?

1. குறுக்கு வழியில் பணத்தைக் தேடி
குதூகலம் கண்டேனா? -புவி
வெறுக்கும் அளவு விதம் விதமான
வேலைகள் செய்தேனா?
செருக்கு மிகுந்து தாரணி தூற்றும்
செயல்கள் புரிந்தேனா? - எனில்
உருக்க முள்ள பேர்கள் வருந்த
உவமைகள் சொன்னேனா?

2. நம்பிய பேரை நடுக்கடல் விட்டு
நடக்க விழைந்தேனா? -பலர்
விம்மி அழவும், வேதனை (பெ) உறவும்
வேலைகள் செய்தேனா?
அம்புவி மீதில் அதிகா ரத்தால்
அடக்க முனைந்தேனா? -நிதம்
செம்மை வழிகள் பற்ற மறந்து
சிரித்து மகிழ்ந்தேனா?

3. காட்டிக் கொடுக்கும் தீச்செயல் தன்னால்
காசுகள் பெற்றேனா?- கூர்
ஈட்டி போலே இருந்து உலகோர்
இதயம் துளைத்தேனா?
மாட்டை விடவும் கீழாய் நடந்து,
மானம் தொலைத்தேனா? -நிதம்
போட்டி பூசல் பெறாமை கொண்டிப்
புவியில் வாழ்ந்தேனா?

4. வட்டிக் காகப் பணத்தை ஈந்து
வாழ்ந்து முடித்தேனா? -எனைக்
கட்டிய மனைவி கண்ணீர் விட்டுக்
கதற இருந்தேனா?
பட்டினி கிடந்து மழலைகள், துயிலும்
படிநான் வாழ்ந்தேனா? சதித்
திட்டம் போட்டுத் தீமைகள் செய்யத்
தினமும் துணிந்தேனா?

கொந்தளிப்பு 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேடு!

1. மதுதொட்டால் வாழ்வினிலே கேடு!- நீ
மதுஅரக்கன் தனைக்கண்டால் ஓடு!
எதுபிழையோ சரியென்றே சொல்லும்;- இந்த
இழவுமது உனைவிரைவிற் கொல்லும்!

2 மதிக்கின்ற உறவுகளும் வெறுக்கும்! - ஈற்றில்
மண்கூட, உனைவேறாய் ஒதுக்கும்!
துதிக்கின்ற மனைவியவள் முறைப்பாள்!- வாழ்வில்
துணைசெய்யும் பிள்ளைகளும் உதைப்பார்!

3. மங்கிவிடும் உந்தனது மதிப்பு! - உனை
மற்றவர்கள் காணுகையில் சிரிப்பு!
தங்கமென்ன தனமெல்லாம் கரையும்!- வாழ்க்கை
தவிடுபொடி, துயர்வந்தே நிறையும்!

4. பெரியவர்கள் உனைத்திரும்பிப் பாரார்! -நல்ல
பெண்குலத்தார் உன்னயலில் சேரார்!
பிரியமுடன் அழைத்தாலும் வாரார்!- சென்றால்
பிரச்சினைதான் என்றுரைப்பார் ஊரார்!

5. கண்டசுகம், என்னமது தன்னால்? -வாழ்வில்
காணுதுயர் அத்தனையும் உன்னால்!
என்பதனை நீ உணர்ந்தால் நன்மை! -மது
ஏற்க மறந் தால் வாழ்வு செம்மை!

**புதிய உலகம் 1987**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எக் காலம்?

1. ஓடாகித் தம் முடலம்
   உருக்குகுலைந்து போனாலும்,
மாடாகித் தினமுழைத்து
   மாடிமனை தோற்றுவிக்கும்
ஈடாகா ஏழை மகன்
   இருக்கின்ற குடிசையது,
ஓடேறும் வீடாக
   உருப்பெறுவ தெக்காலம்?

2. கடல்நடுவே அலையோடு
   காலமெலாம் போராடி
உடல்காய்ந்து சோர்வுற்று
   உயர்வான குடும்பத்தின்
மிடி தீர்க்கும் மீனவனின்
   மெய்வருத்தம் தான் தீர்ந்து,
வடிவாகச் சிரித்து அவன்
   வாழுவது எக்காலம்?

3. சேற்றினிலே பாடுபட்டுச்
   செகத்தினிலே அனைவருக்கும்
சோற்றினையே வழங்குகின்ற
   சோர்வில்லா விவசாயி
ஏற்கும் துயர் துன்பமது
   எல்லாமும் தான் தீர்ந்து
மாற்ற முறு வாழ்வேற்று
   மகிழுவது எக்காலம்?

4. சாதனைகள் தோற்றியொரு,
   சரித்திரத்தைப் படைக்காமல்,
வேதனையால் விரக்தியுடன்
   விதியென்று வாழுகின்ற
காதலியைக் கைப்பிடிக்கக்
   காசுபணம் கேட்கின்ற
கா (பா) தகர்கள் மனம்மாறிக்
   கைப்பிடிப்ப தெக்காலம்?

- தினகரன் 1986



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணை காட்டு!

1\. எந்தனின் இல்லம் ஓலை
ஏற்றதோர் குடிசை; ஓட்டை!
சிந்திடும் வானத் தூறல்
சிற்சிறு துளிகளாகி
வந்திடும் குடிசைக் குள்ளே
வருந்தியே வாழுகின்றேன்!
கந்தனே ஏழ்மை மாறக்
கருணையைக் காட்டுவாயா?

2\. காலது பிடிக்கும் வேலை
கைவரா திருத்த லாலும்,
வாலது பிடிப்போர் தம்மை
வாழ்த்திட மறுப்ப தாலும்,
ஏழையாய் என்றும் பாரில்
இருக்கிறேன்! நீயென்றாலும்,
பாலையாம் என்றன் வாழ்வில்
பசுமையைக் காட்டுவாயா?

3\. ஈட்டிய பொருட்க ளென்று,
என்வச மேதுமில்லை!
நாட்டினில் நல்லோ னென்ற
நாமமே மிச்ச முண்டு!
வாட்டிடும் இன்னல் மாறி
வாழ்வினில் மகிழ்வு காண,
காட்டிடு கருணை தன்னைக்
கந்தனே நானும் வாழ.....

4\. தன்னலம் கொண்ட மாந்தர்
தரணியில் மலிந்த தாலே
நன்மைகள் நீதி யாவும்
நலிவுகள் காண லாச்சு!
புன்மையே கண்கள் கண்டு,
புண்ணென இதயம் நோக
இன்னிலம் வாழுகின்றேன்
இறைவனே கருணை காட்டு!

**- சிந்தாமணி 1989**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் பெயரே ஞானி!

1. மதுதொட்டேன்! வயதேற மங்கையினைத் தொட்டேன்!
மதிகெட்டேன்! மந்தையென மடயனென வாழ்ந்தேன்!
புதுப் புதிதாய் நண்பர்களைப் புவிமீது பெற்றேன்!
புத்தகங்கள், அகராதி நிகண்டு பல கற்றேன்!
இதுவொன்று, இனியொன்று இப்படியே வாழ்வு!
இன்பமுடன் துன்பமதும் இணைந்ததுவே வாழ்வு!
புதிராக உள்ளதெலாம் அனுபவத்தின் முன்னே!
புரிந்ததடா ! உலகினிலே நானினிமேல் ஞானி!

2. கோவையிதழ் எனச் சொல்லி கொஞ்சியதும் அன்றே!
கோடானு கோடி பணம் இழந்ததுவும் அன்றே!
பாவையர்கள் தருசுகமே நிலையென்று நின்று,
பட்டதுயர் அத்தனையும் விட்டதுவோ இன்று!
சேவையினி மானிடர்கள் செம்மைவழி காணும்-
சேவையது! சிற்றின்ப வாழ்வினிமேல் வேண்டாம்!
யாவையுமே உணர்ந்தபின்னர் யான்கண்ட பாதை,
யாருக்கும் புரியாது என் பெயரே ஞானி!

3. ஆசையெனும் துயர்க்கடலுக் கப்பாலே யுள்ள,
அழகுதரும் ஒ(தி) ரு நகரை அடைகின்ற எண்ணம்,
ஓசையின்றி உள்ளத்தே உறங்குதடா! அந்த
உயர்வான எண்ணத்தை நினைக்கின்றேன் நித்தம்!
காசொன்றே வாழ்வென்று கருதுகின்ற மூடர்
கற்பனைகள் அத்தனையும் நிஜமாவதில்லை!
காசினியில் மூவாசை களைந் தெறிந்துமோனம்
காண்கின்ற துரியநிலை- என்பெயரே ஞானி!

- சிந்தாமணி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை!

1. கரல்நொந்தும் பத்துத் திங்கள்
காதலாய்ச் சுமந்து; பெற்றுப்
பால் தந்து நாளும் எம்மைப்
பரிவுடன் வளர்த்து விட்டு
நூல்தந்து பள்ளி சேர்த்து
நோய்வந்தால் கண்போல் பார்த்து,
வாழ்விக்க முயன்ற அன்னை
வையகம் தனிலே தெய்வம்!

2. பத்தியம் காத்து எம்மைப்
பகலிர வெல்லாம் தூக்கி
நித்தமும் தன்னை நோக்கா
நினைப்புடன் உதிரம் தன்னைச்
சத்துள பாலாய்த் தந்த
தாயவள் தானே; ஆமாம்
இத்தரை மீதில் காணும்
எம்மரும் காதல் தெய்வம்!

3. எறும்புடன் ஈதேள், பல்லி
எதுவுமே எங்கள் பக்கம்
நெருங்கிடா விதமாய்க் காத்து
நிசியிலும் கண்வி ழித்து
அரும்பிடும் பாசம் மேவ
அருகிலே இருந்த தெய்வ
உருவினாள் பெருமை மிக்க
உத்தமி தானே அன்னை

-சிந்தாமணி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பயணம்

நல்லதோர் பயணம் தேடி,
நாடினேன் யாழ்ப்பாணத்தை!
பல்லவர்காலக் காட்சி,
பார்த்தனோ? பார்த்திலேனோ?
வல்லவன் என்பதாலே,
வாழ்கிறேன் இன்றும்! இன்றேல்!
இல்லவே இல்லை இந்த
இன்னுயிர்க் கூடுதானே!

எப்படிச் சொல்ல லாகும்!
எவற்றினை எழுத லாகும்!
அப்படிச் சொல்வ தென்றால்,
அதுவுமோர் பாரதம் தான்!
முப்பெரும் கடலால் ஆன,
முதுபெரும் நகரை விட்டுத்
தப்பிய காட்சி தானே
தமியனின் நெஞ்சகத்தே!

நூறுதாள் அதிகமில்லை!
நுழைந்திடும் சீட்டை வாங்கி
ஏறினால் ஐயகோ என்
இரண்டுகால் மீதி செல்லும்!
ஆறுதல் காலுக் கேது?
ஆமடா கைக்கு மேது?
"பேறெனில் முட்டும் மார்புப்
பெண்மணி வரிசை தானே!"

ஓத்தடம் இல்லை யென்றால்
உய்ந்திருப் பேனா அன்று?
எத்தனை நோய்கள் உண்டோ,
இப்புவி தன்னில்? உள்ள
அத்தனை நோயும் வந்தே
ஆட்கொளும்! குற்றமில்லை!
உத்தமப் பயணம் தம்பி
ஒரு நூறு போனால் என்ன?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருக சித்திரையே!

இத்தரை மாந்தர் துயர்களைந் தோட்டி
இன்பம் தனைக் காட்ட
வித்துவம் மிக்க சத்தியக் கவிஞர்,
விரும்பி உனைப் பாட
புத்துலகொன்று பூத்திடும் வண்ணம்
புறப்படு சித்திரையே!

நித்தமும் கேட்கும் (ச) யுத்தப் பேச்சு
நிலைகொள் ளாதோட,
முத்திரை பெற்று முத்தமிழ் வாழ
முரசம் கலந்தார்க்க
சித்திரை யென்னும் பொன்னாள் வருக!
செகமே தலைதாழ்த்த!

அடங்கி வாழும் அவல வாழ்க்கை
அந்தந் தனைக் காண
படரும் அன்பு பாரில் என்றும்
பரிணமித்தே ஓங்க
அடிமை விலங்கைத் தகர்க்கும் திருநாள்
ஆவாய் சித்திரையே!

கும்பிக் காக மாடாய் வெயிலில்
குளிக்கும் ஏழைகள் தாம்
வெம்பி வாழும் விரக்திக் கோலம்
விரைவில் தான் ஓடிச்
செம்மை வாழ்வு பெற்றோர் என்றே
சிரிக்க நீ வருக!

**தினபதி 1986**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேன் தொட்டி நீ!

எழில் நிலவே தளிருடலே, இன்ப ஊற்றே!
ஏகாந்த வெளியுலவும் தென்றற் காற்றே!
பொழில் வழங்கும் இன்கனியே! வாசப்பூவே!
புலமைமிகு பாவலர்கள் புனைந்த பாவே!
நெளி கூந்தல் காரிகையே! இனிக்கும்தேனே!
நெருங்கிவளர் கானகத்தில் வதியும் மானே!
களிதந்தே என்னுள்ளம் ஈர்ந்த சொத்தே!
கருங்கடலில் வாழ் சங்கம் ஈன்ற முத்தே!

சொற்கொண்டு தீட்டவொணா எழிலின் தேவி!
சொந்தமடி எந்தனுக்கு உந்தன் ஆவி!
கற்கண்டும் முக்கனியும் கலந்த சாறே!
கம்பனவன் இலக்கியமாய் புனைந்த பேறே!
வெற்றிலைபோல் மகத்துவங்கள் பெற்றகோதை!
வேல்விழி நீ காட்டுவதே எந்தன் பாதை!
சிற்றின்பச் சாகரமே ! சீனிக்கட்டி!
சிற்றெறும்புநான் ! நீயோ "தேனின் தொட்டி!"

தினமுரசு 1994


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைகின்ற நாள் வரட்டும்

அத்தை மகளே! என் அன்பான மோகனமே
சித்தம் கலங்காமல் சிரித்திருநீ வாடாதே
அத்தான் வந்துனக்கு அழகாகத் தாலிகட்டிக்
கொத்து மலர்சூடிக் குதூகலிக்கும் நாள்வரட்டும்!

ஊரார் எனைவெறுத்தார் உறவினர்கள் உனைவெறுத்தார்!
சீரான அன்பினுக்குச் செல்வம் நிகராமே?
பாரா திருக்கின்றாய் பாரினிலே காதலியே
காரேன்? மாளிகையேன்? கைப்பிடிக்கும் நாள்வரட்டும்!

பழகியபின் உந்தனுடன் பற்றுவைத்த நாள்முதலாய்
உலகத்தை நான் எதிர்த்தே உந்தனுடன் வாழுகிறேன்
நிலவாக என் மனதில் நின்றே களிப்பூட்டும்
இளமானே பொறுத்திருநீ இணைகின்ற நாள்வரட்டும்

பள்ளிப்படிப் புவிட்டுப் பாதையிலே நீநடந்தால்
கள்ளினிலே துஞ்சுகின்ற கட்டெறும்பு நிலையாவேன்
உள்ளம் உனதுடைமை உயிரானாய்காதலியென்
கள்ளமில்லா அன்பு கைக்கே கைப்பிடிக்கும் நாள்வரட்டும்!

இதயத்தில் உன்னினைவு இனிக்கின்ற பாண்மையினால்
கதையாகிக் கவியாகிக் காலமெலாம் வாழ்கிறது
நிதம் நிதமும் நீயெந்தன் நினைவுகளில் வருகின்றாய்
புதுமலரே உந்தனுக்குப் பூச்சூடும் நாள்வரட்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானம் கடையில் இல்லை

பாலைநாடு வேலைதேடிப் பறந்துவிட்ட பாவையர்
பாவமங்கு பட்ட இன்னல் பத்துநூறு அல்லவே,
காலை மாலை, மதியமென்று ஓய்வுமேது மில்லையாம்
காசுதந்து வேலை கொள்வோர் செய்வதெலாம் தொல்லையாம்!

மாடி வீட்டு மைனர்களின் படுக்கையறைப் பொம்மையாய்
மாநிலத்தில் பாவையர்கள் வாழுவதும் உண்மையே
கோடியொன்று பணம் படைத்துக்கொடிபிடித்த வாழ்விலும்
கோதையர்கள் மானத்தோடு கூழ் குடித்து வாழலாம்!

காலமெலாம் காப்பதென்று மணம் முடித்த காளைகள்,
காதலியை அரபுநாடு அனுப்புகிறார் கோழைகள்
ஞாலமிப்போ கெட்டதெலாம் காசுசெய்த கோலமே
நன்மனங்கள் ஏழ்மையிலும் ஒன்றிணைந்து வாழுமே

கடவுச்சீட்டுப் பெற்றிடலாம். கடல் கடந்து போகலாம்!
காசுவரும் காணிபூமி வீடுகார்கள் வாங்கலாம்!
உடமையென்று உள்ள மானம் அழிந்து விட்ட போதிலும்
உனது கையில் பணமிருக்கும் கடையில் மானம் இல்லையே!

"அக்கரைகள் பச்சையில்லை" தத்துவத்தின் உண்மையே
அகமதிலே கொண்டிருப்பீர்! ஆவதெலாம் நன்மையே
தக்கதொரு கொள்கையுடன் தரணியிலே நின்றவர்
தன்மானம் குன்றாமல் தரணியினைவென்றவர்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவள் !

முன்னே இரண்டு மொக்குடையாளவள்
முல்லைச் சிரிப்புடையாள்!-கவின்
என்னே யென்று ஏங்கிட வைக்கும்
எழிலாள் எனக்குடையாள்!
பின்னே இரண்டு பின்னல் அசையும்,
பேதை நடந்திடுங்கால்-தினம்
கன்னம் தடவிக் களிக்கத் தருவாள்
காதல் விருந்திடுவாள்!

காலைப் பெயர்த்து (ஓ) ஆடி நடப்பாள்
காந்தம் போலிழுப்பாள்! -தினம்
வேலைப் பழிக்கும் விழியால் வீசி,
வெற்றிக் கணை தொடுப்பாள்!
நூலை நிகர்த்த இடை யுடையாளவள்
நுங்காய் மார்புடையாய்!-நிதம்
சாலை தனிலே சந்திப்பாளவள்
சந்தோசம் தருவாள்!

மூன்று கனிகள் தாங்கும் உடலாள்
மோகம் தந்திடுவாள்!-இதழ்
தேன்தான் என்று திளைக்கத் தந்தென்-
தேவை தீர்த்திடுவாள்-!
கான்வாழ் மயிலின் சாயல் மிகுத்தாள்
கவிஞன் உள்ளத்தில்; அவள்
நான்தான் உங்கள் உயிரே யென்று
நடனம் புரிகின்றாள்!

சிந்தாமணி -1988



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடமில்லை!

உழுவார் உழவர் வயல்
உருப்பெறுமே புவிவாழ்வு!
எழுதும் புலவோரால்
இலக்கியங்கள் வளமாகும்!
பழுதில் தமிழ்மொழியின்
பாதை (சிறக்கவென்று) தூய்மைபெற,
எழுதும் கவிஞர்க்கு,
ஏனோ இடமில்லை!

பட்டம்-போர்வை கிளைப்
பாராட்டை நோக்காமல்
கட்டுப் பாட்டுக்குள்
கவிதைகள் நிறுத்தாமல்,
எட்டுத் திக்கினிலும்,
எழிற்றமிழை வாழ்விக்கும்
திட்டமுடன் கவிபுனையும்
தீரர்க்கேன் இடமில்லை!

வால்பிடித்து மற்றவரை
வாழ்த்த நினைக்காமல்,
கால்பிடித்து இறுதியிலே
கவிழ்க்க முனையாமல்
நூல்சிறக்க நல்லதமிழ்
நுவலும் கவிஞர்க்கு,
வாழ்கின்ற ஏடுகளில்
வாழும் இடமில்லை!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானி நிலை மறப்பான்!

கோலவெழில் குடிகொண்ட, குமரி!- செய்யும்
குறும்புகளில் அமவளோர் குழவி!
காரிகைதான் எந்தனது துணைவி!- இன்பம்
காட்டவென்றே (உருவெடுத்த) கைப்பிடித்த மனைவி!

முன்னழகு பங்கயத்தின் மொட்டு!- இவள்
மோகவெறி தானூட்டும்! "வெட்டு!"
கண்ணழகு கயல்மீனின் சாயல்! -இதழ்
கற்கண்டு, சர்க்கரையின் தோயல்!

ஆடியவள் நடைபயிலும் கோலம்!- கண்டு
அடியவனோ மறந்திடுவேன் ஞாலம்!
சூடிவரும் மல்லிகையோ வாசம்!- எழிற்
சுந்தரிக்கு என்மீதே நேசம்!

கருமுகில்தான் கன்னியவள் கூந்தல்!-அவள்
கையிரண்டும் கவின்கொண்ட காந்தள்!
பருவத்தேன் சுமக்கின்ற மேனி!- எழிற்
பாவையிவள் என்னிதய ராணி!

அதரங்கள் அப்பினை வெல்லும்! -இவள்
அழகென்ன நித்தமுமே கொல்லும்
புதையலவள்! இன்பத்தின் கேணி!- அவள்
புன்னகையாள் நிலைமறப்பான் ஞானி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாள் வராதா?

அன்னையே! என்னை ஈன்ற
அன்புசேர் சொத்தே! இங்கு-
என்னைநீ தனியே விட்டேன்,
ஏகினாய் ! இங்கே நானோ-
துன்பிலே துவண்டு நாளும்
துடிக்கிறேன்! மகிழ்ச்சி பெற்று,
மன்பதை மீதில் மீண்டும்
மகிழவோர் நாள் வராதா!

நீசரின் செயலால் இங்கு,
நிம்மதி தூரம் போச்சு!
போசனம் கூட இன்றிப்
புவிமிசை அகதி யென்னும்
வாசகம் தாங்கி நிற்கும்
வாழ்க்கையே அம்மா! யாவும்,
ஆசனம் கொள்ளும் சண்டை,
அகலுமோர் நாள்வராதா?

பயின்ற நாள் சின்னக்காலம்
பயமறி யாதுன் பக்கம்
துயின்றநா ளெல்லாம் எண்ணத்
துயரமே தாயே! க(ச)ட்டித்
தயிரினைக் கடையும் மத்தாய்
தரணியோர் செய்கை! எந்தன்
உயிரினைப் பறிக்கு தம்மா!
உறங்கு மோர் நாள்வராதா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலித்தேன்!

பாட்டெழுதும் கவிஞனென்ற பட்டம் தந்தாய்!
பாரிலெந்தன் புகழ்வாழத் திட்டம் தந்தாய்!
ஈட்டுகின்ற செல்வங்கள் எல்லாம் தந்தாய்!
இறுதிவரை மகிழ்ந்தென்னை இருக்கச் செய்தாய்!

நட்புக்கு நல்லவரை இணைத்துத் தந்தாய்!
நன்றியோடு வாழ்கின்ற இதயம் தந்தாய்!
பட்டங்கள் பதவி பல தேடித் தந்தாய்!
பரம்பொருளே எனத் தலைவன் ஆக்கிவைத்தாய்!

உயர்வான சிந்தனைகள் உதிக்கச் செய்தாய்!
ஊரவர்கள் எனையென்றும் மதிக்கச் செய்தாய்!
செயமெந்தன் வாழ்வினிலே சேரச் செய்தாய்!
செய்கைகளால் நன்மைகளே சேரச் செய்தாய்!

மாண்புள்ள மங்கையினைத் துணையாய்த் தந்தாய்!
மண்வியக்க மழலைகளை எழிலாய்த் தந்தாய்
தூண்போல நிமிர்ந் தென்னை வாழச் செய்தாய்!
துயரின்றி சிரிக்கின்ற புளகம் தந்தாய்!

கற்றவர்கள் எனைமதிக்க கல்வி தந்தாய்!
கண்ணியத்தை மதிக்கின்ற உள்ளம் தந்தாய்!
மற்றவர்கள் நேசிக்கும் மதிப்புத் தந்த
மகிபா உன் மலரடியை அஞ்சலித்தேன்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
Printed by Unie Arts (Pvt) Ltd